ICRC

இலங்கை

# துணைநிற்கும் உதவித்திட்டம்: யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் சார்ந்த 350 குடும்பங்களுக்கு அனுகூலம்

ஒக்டோபர் 2022



சா்வதேச செஞ்சிலுவைக் குழுவின் (ஐசிஆர்சி) 'துணைநிற்கும் உதவித்திட்டம' 2015இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம், துணையாக உடனிருக்கும் நூற்றுக்கணக்கானவர்களுக்கும், ஆட்கள் காணாமற்போன ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கும் உதவி வழங்கப்பட்டு அவர்கள் இணைக்கப்பட்டு வலுவூட்டப்பட்டார்கள். இந்தத் திட்டம் 25 மாவட்டங்களிலும் அமுலாக்கப்பட்டது. தமது அன்புக்குரியவர்கள் காணாமற்போன குடும்பங்களின் உணர்வு ரீதியான சவால்களை மாத்திரமன்றி, பொருளாதார சவால்களையும் சமாளிக்க இத்திட்டம் உதவுகிறது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள் அடங்கலாக வடமாகாணத்தில் ஆட்கள் காணாமற்போன மூவாயிரத்து 270 குடும்பங்கள் துணையாக உடனிருப்பதற்கு பயிற்சி பெற்ற 194 பேரின் மூலம் உதவி பெற்றன.

இந்தத் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் ஆகின்றன. இதன் கடைசி கட்டம் வட மாகாணத்தில் அமுலாகிறது. இதன் மூலம், துணையாக உடனிருக்க பயிற்சி பெற்ற 22 பேர் மூலமாக யாழ்ப்பாண குடாநாட்டிலும், அதனைச் சூழவுள்ள தீவுகளிலும் ஆட்கள் காணாமற்போன 350 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்படுகிறது.

ஆட்கள் காணாமற்போன குடும்பங்கள் தொடர்ச்சியாக ஒரு நிலையான தடுமாற்றத்தை எதிர்கொள்கிறார்கள். தமது அன்புக்குரியவர் உயிருடன் இருக்கிறாரா அவர் திரும்பி வருவாரா என்ற அங்கலாய்ப்பு அவர்களுக்கு உண்டு. ஐசிஆர்சியின் மூலம் பயிற்சி பெற்று துணை நிற்பவர்கள் இந்த பதகளிப்பை சமாளிக்க குடும்பங்களுக்கு உதவி செய்கிறார்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துணைநிற்பவர் கருத்து வெளியிடுகையில், 'துணையாக நிற்றல் என்பது உதவக்கூடிய நண்பனாக இருத்தல் ஆகும். அந்தக் குழும்பங்களுக்கு பகிர்ந்து கொள்ளக்கூடிய பலதும் இருந்தாலும், செவிமடுக்க யாரும் இல்லை என்பதை நான் அறிந்தேன்,' என்றார்.

துணையாக உடனிருப்பவர்களுக்கும், அன்புக்குரியவர் காணாமற்போன குடும்பங்களுக்கும் இடையிலான பிணைப்பானது நம்பிக்கையிலும், அடுத்தவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய உளப்பாங்கிலும் கட்டியெழுப்பப்படுகிறது. இந்தப் பிணைப்பானது நிகழ்ச்சித் திட்ட கால எல்லையைத் தாண்டி நீடிப்பதுடன், பரஸ்பரம் உதவி செய்து கொள்ளக்கூடிய வகையில் ஆட்கள் காணாமற்போன குடும்பங்களை இணைக்கிறது. இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கருத்து வெளியிடுகையில், 'எனக்குத் துணை நிற்கும் பெண் எம்மை சந்திக்க வருவதில் மகிழ்ச்சியடைகிறேன். காணாமற்போன எனது அன்புக்குரியவர் பற்றி அவருடன் பேச முடியும். எனக்கு நிறைய கரிசனைகள் உள்ளன. இவற்றைக் கேட்க இந்தப் பெண் இருப்பது ஆறுதல் தான்,' என்றார்.

## சுகாதார அமைச்சிற்கான நன்கொடைகள்




மனிதநேய பதிலளிப்பின் ஒரு கட்டமாக, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் சேர்ந்து ஐசிஆர்சி கடந்த ஜூலை மாதம் சுகாதார அமைச்சிற்கு குருதியை சேகரிக்கக்கூடிய 10,000 பைகளை வழங்கியது. மருந்துப் பொருட்களினதும், மருத்துவ உபகரணங்களினதும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது இதன் நோக்கம். சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளரும், சுகாதார மற்றும் பராமரிப்பு சார்ந்த நன்கொடைகளை ஒருங்கிணைப்பவருமாகிய டொக்டர் அன்வர் ஹம்தானியிடம் குருதிப்பைகள் கையளிக்கப்பட்டன.

## தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவிகள்




தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உடலியல் மற்றும் உளவியல் நலனுக்காக சுகாதார வசதிகள் போதியளவு கிடைப்பதன் முக்கியத்துவத்தை ஐசிஆர்சி அங்கீகரிக்கிறது. அதன் அடிப்படையில், அந்நிறுவனம் நாடெங்கிலும் நிலவும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில், நாட்டின் பல பாகங்களில் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள 25 நிலையங்களுக்கு சுகாதார பொருட்கள் அடங்கிய 22,520 பொதிகளை வழங்கியது.

## நலிவுற்ற குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்




தமது வாழ்வாதார நடவடிக்கைகளை விருத்தி செய்து கொள்வதற்காக ஐசிஆர்சி 326 மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கியது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உறியங்கட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஆட்கள் காணாமற்போன மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அங்கத்தவர்களும், மாற்றுத் திறனாளிகளும், மிகவும் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் உபகரணங்களைப் பெற்றார்கள். மட்டக்களப்பில் உள்ள சமுதாய பங்காளி நிறுவனங்கள், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஆகியவற்றின் பங்களிப்புடன் விநியோகம் இடம்பெற்றது.

## பயிலமர்வு: மனிதாபமான நெருக்கடியின்போது ஊடகங்களின் வகிபாகம்




ஐசிஆர்சி இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் (SLPI) சேர்ந்து, ஆகஸ்ட் 19ஆம் திகதி 'மனிதாபிமான நெருக்கடியின்போது ஊடகங்களின் வகிபாகம்' என்ற பயிலரங்கை ஏற்பாடு செய்தது. இந்தப் பயிலரங்கு மூன்று அமர்வுகளை உள்ளடக்கி இருந்தது. அவை யாவன் மனிதாபிமான நெருக்கடிகளையும், ஊடகங்களையும் புரிந்து கொள்ளுதல், தரவுகளால் வழிநடத்தப்படும் மனிதநேய அறிக்கையிடல், தீர்வு அடிப்படையிலான அறிக்கையிடல். மனிதநேய மற்றும் ஊடகத்துறை சார்ந்த துறை நிபுணர்கள் மூலம் பயிலரங்கு நடத்தப்பட்டது. இதில் உள்ளூர் செய்தியாளர்கள் 20 பேர் வரை பயனடைந்தார்கள். ஐசிஆர்சி 'போர் அறிக்கையிடல்: நெறிமுறைகள் சார்ந்த திசையறிந்து பயணித்தல்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த மெய்நிகர் ஊடக உச்சிமாநாட்டுடன் இணைந்ததாக இந்தப் பயிலரங்கு நிகழ்ந்தது.

# தரவுகளும், புள்ளி விபரங்களும்
## (2022ஆம் ஆண்டு மே முதலாம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 31 வரை)

## ஆட்கள் காணாமற்போன குடும்பங்களின் தேவைகளில் உதவிடல்

- தமது உறவுகளைக் கண்டுபிடித்து தருமாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீதான நடவடிக்கைகளுக்காக **227** குடும்பங்கள் தொடர்பு கொள்ளப்பட்டதுடன், ஆட்கள் காணாமல் போனமை தொடர்பான **9** விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டன.
- ஆட்கள் காணாமற்போன குடும்பங்களைச் சேர்ந்த உறவினர்கள் **705** பேருக்காக எமது பங்காளித்துவ ஸ்தாபனங்கள் மூலமாக (தனிப்பட்ட மற்றும் குழுநிலை சார்ந்த) சமூக உளவியல் உதவிகளை வழங்குவதற்காக **1,841** வாராந்த அமர்வுகள் நடத்தப்பட்டன. இவர்களில் **151** பேர் ஏனைய பொருளாதார, சட்ட/நிர்வாக, கல்வி, சுகாதார தேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யக்கூடிய ஸ்தானங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.
- ஆட்கள் காணாமற்போன நிலையில் நலிவடைந்த் **1,028** குடும்பங்களுக்கு தத்தமது நாளாந்த உணவு மற்றும் போஷாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்து. சுகாதார நிலைமைகளை மீளக்கட்டியெழுப்பிக் கொள்வதற்காக இருவார காலத்திற்குத் தேவையான பல்நோக்கு பண உதவி (இலங்கை நாணயப்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும் **18,000** ரூபா) வழங்கப்பட்டது.
- உணவு உள்ளிட்ட அத்தியாவசிய செலவுகள் அடங்கலாக உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஆட்கள் காணாமற்போன மிகவும் கஷ்டமான **65** குடும்பங்களுக்கு பல்நோக்கு நிதி மானியங்கள் வழங்கப்பட்டன.
- சமுதாய அடித்தள வாழ்வாதார உதவித் திட்டத்தின் (CBLSP) கீழ், **210** குடும்பங்கள், வாழ்வாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பித்து, அபிவிருத்தி செய்து கொள்வதற்காக மீன்பிடி உபகரணங்களைப் பெற்றன.
- அரசாங்கத்தின் விலங்கு மருத்துவ மற்றும் விவசாயத் திணைக்களங்களின் ஒருங்கிணைப்புடன், சமுதாய அடித்தள வாழ்வாதார உதவித் திட்டத்தில் **227** பேருக்கு வணிக முகாமைத்துவ ஆற்றல்கள் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது.

### தடயவியல் ஆற்றல்களை வலுப்படுத்தல்

- ஐசிஆர்சியின் உதவியுடன், எலும்புக்கூட்டுத் தொகுதி பரிசோதனை நடைமுறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் தடய மானுடவியல் பற்றிய தேசிய கையேட்டை வரைவது தொடர்பில் தடயவியல் மருத்துவத் துறை சார்ந்த பட்டப் பின்படிப்பு பயிலுனர்கள் **39** பேருக்காக தடய நோய் அறிகுறியியல் கல்லூரி பயிலமர்வை நடத்த வசதியளித்தது. இதற்கு அப்பால், பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ நிலையங்களுக்கு பரிசோதனைக் கருவிகள், உசாத்துணை நூல்கள் போன்றவை அன்பளிப்பாக வழங்கப்பட்டன.
- **5** பல்கலைக்கழகங்களின் தடயவியல் மருத்துவ பிரிவுகளுக்கு தனிநபர் பாதுகாப்புக் கருவிகளும், தொற்றுநீக்கப் பதார்த்தங்களும் நன்கொடை செய்யப்பட்டன.

## தடுப்புகாவல் நிலைமைகளை கண்காணித்தல்

- ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு **14** விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்போது கண்டறியப்பட்ட விடயங்களும், விதந்துரைகளும் சிறைச்சாலை அதிகாரிகளுடன் நம்பகமான முறையில் பகிர்ந்து கொள்ளப்பட்டன.
- நாடு முழுவதும் தடுத்து வைக்கப்பட்டுள்ள **179** பேரை தனித்தனியாக சந்திக்கும் வகையில் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை நேரில் பார்க்கச் செல்வதற்காக **220** குடும்பங்களுக்கு பயணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.
- சுகாதாரப் பொருட்கள், கல்வி மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள **15,478** பேருக்கு தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றவாறான உதவிகள் வழங்கப்பட்டன.
- கைதிகள் பற்றிய சர்வதேச விதந்துரைகள் மற்றும் உள்ளூர் நீதிச் சட்டகம் தொடர்பான வழிகாட்டல்கள் பூர்த்தி செய்யப்பட்டன.
- தும்பர, களுத்துறை, மஹர, நீர்கொழும்பு, வெலிக்கட உள்ளிட்ட **5** சிறைச்சாலை வைத்தியசாலைகளுக்கு அடிப்படை மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் இடம்பெற்ற தடுப்புக் காவல் சுகாதாரம் பற்றிய முதலாவது உலக மாநாட்டில் சுகாதார அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் **4** பேர் கலந்து கொண்டார்கள்.
- **5** சிறைச்சாலைகளில் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கும், பிள்ளைகளுக்கும் பால் வழங்கப்பட்டது.
- ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகளை மேற்கொள்கையில், கொவிட்-19 தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளில் உதவுவதற்காக கேகாலை சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு **100** முகக்கவசங்கள் அன்பளிப்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- மஹர சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு **4** மேசைகளும், **13** கதிரைகளும், **2** உலோக அலுமாரிகளும் நன்கொடையாக வழங்கப்பட்டன.
- வெலிக்கடை சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு நுஊபு கருவியொன்றும், பிரின்டரும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

## மனிதநேய சட்டத்தை மேம்படுத்தல்

- தென்சூடானில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்காக சென்ற இராணுவ வீரர்கள் **93** பேருக்கும், மத்திய ஆபிரிக்க குடியரசில் ஐக்கிய நாடுகளின் பன்முக பரிமாண ஒருங்கிணைக்கப்பட்ட நிலைபேறாக்கல் பணியில் (ஆஜரேுளூஊயு) இணைந்து கொள்கின்ற கடற்படை வீரர்கள் (வான் படைப்பிரிவு) **166** பேருக்குமாக **2** விளக்கமளித்தல் அமர்வுகள் ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டன.
- ஜூலை 19ஆம் திகதி தொடக்கம் **21**ஆம் திகதி வரை கோலாலம்பூர் நகரில் இராணுவ மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கான நிலையம் (CoMIHL) நிகழ்நிலையில் நடத்திய செயற்பாட்டு சட்டம் தொடர்பான மூன்று நாள் கற்கைநெறியில் முப்படைகளைச் சேர்ந்த (1 சட்ட, 1 செயற்பாட்டு அதிகாரிகள் அடங்கலாக) உத்தியோகத்தர்கள் **6** பேர் கலந்து கொண்டார்கள்.
- தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் தமது தொழில் திசைமுகப்படுத்தல் பயிற்சியின் ஓரம்சமாக பொலிஸ் கடமைகள் மற்றும் பொது ஒழுங்கு முகாமைத்துவம் பற்றிய சர்வதேச நியமங்கள் மீதான இரண்டு மெய்நிகர் பயிற்சி அமர்வுகளில் பிரதம பொலிஸ் பரிசோதகர்கள் **108** பேர் பங்கேற்றார்கள்.
- கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதற்கான சர்வதேச விதிமுறைகள் மற்றும் நியமங்கள் தொடர்பான ஒருநாள் பயிற்சித் திட்டத்தில் குற்றப்புலனாய்வு திணைக்களம் (CID) மற்றும் பயங்கரவாத தடுப்பு மற்றும் பயங்கரவாத புலனாய்வு பிரிவுகளைச் (TID) சேர்ந்த புலனாய்வு உத்தியோகத்தர்கள் **49** பேர் கலந்து கொண்டார்கள்.
- கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கை பொலிஸ் கல்லூரியில் நடைபெற்ற பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பான சர்வதேச நியமங்கள் பற்றிய ஒரு நாள் பயிற்சியில் புதிதாக நியமனம் பெற்ற பொலிஸ் உப-பரிசோதகர்கள் **230** பேர் பயன்பெற்றார்கள்.

## இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கு உதவி செய்தல்

- பொருளாதார நெருக்கடியால் எழும் மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சிற்கு **10,000** குருதி சேகரிப்புப் பைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.
- தன்னார்வ தொண்டர்கள் **113** பேருக்கு கிளைமட்ட இடர்காப்பு பதலளிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் கூடார முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது.
- மனிதநேய கோட்பாடுகள், சர்வதேச செஞ்சிலுவை சங்க மற்றும் செம்பிறை இயக்கங்கள் தொடர்பான **24** விழிப்புணர்வு அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- மாவட்ட மட்டத்திலான நிகழ்ச்சிகளில் **7** முதலுதவிச் சேவைகள் வழங்கப்பட்டன.
- முதலுதவி தொழில்நுட்பங்கள் சம்பந்தமான மறுபயிற்சியில் தன்னார்வ தொண்டு அடிப்படையிலான முதலுதவி பயிற்றுவிப்பாளர்கள் **47** பேர் இணைந்து கொண்டார்கள்.


**செஞ்சிலுவை சர்வதேச குழு**
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
T + 94 (11) 250 33 46
F + 94 (11) 250 33 48
E-mail: colombo@icrc.org www.icrc.org

**வவனியா அலுவலகம்**
70, வைரவர் கோயில் வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா
T +94 (0) 24222 28 55
F +94 (0) 24222 25 37

**மட்டக்களப்பு அலுவலகம்**
மன்ரேஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
T +94 (0) 65 222 70 70



அட்டைப் படம்: டி. ராஜேந்திரன்/ICRC


© ICRC, October 2022


ICRC

facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc


1968/250 10.2022